**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.306/2022 | Date | : 10.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : பெரியசாமி | Calling | : |
| Father Name | : கோபால் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.07.2025

(எதிரி ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1. நான் பேரோடு ஜேஜே நகரில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரது அக்காவை எங்கள் ஊரில் உள்ள ஒரு நபருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். கடந்த 10.01.2022 ம் தேதியன்று இரவு சுமார் 7:30 மணிக்கு எனது வீட்டின் பக்கத்து வீதியில் உள்ள சேகர் என்பவரது வீட்டிற்கு சென்றிருந்தேன். அங்கு சேகரிக்கும் ஆஜர் எதிரிக்கும் வாய் தகராறு நடந்து கொண்டிருந்தது. நான் அருகில் சென்று இருவரையும் விளங்காட்டி விட்டேன். அப்போது ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் மிகவும் கீழ்த்தரமாக பேசி அங்கிருந்த செங்கல்லை எடுத்து எனது வாயின் மீது அடித்துவிட்டார். அந்த செங்கல் என் முகத்தில் பட்டு எனது முன் வரிசையில் நான்கு பற்கள் விழுந்து விட்டது. இந்த சண்டையை லட்சுமி, மாரியப்பன் ஆகியோர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

2. எனக்கு அடிபட்டவுடன் மயக்கம் வந்துவிட்டது. பின்னர் என்னை சேகர் என்பவர் அவரது பைக் மூலம் சித்தோடு மருத்துவமனை அழைத்துச் சென்றார். அங்கிருந்து ஈரோடு அரசு

மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மறுநாள் அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த வாக்குமூலம் நான் அளித்தது தான் (**புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னை அடித்த செங்கல்லை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காண முடியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் செங்கல் அதேபோல் தான் தெரிகிறது. உறுதியாக கூற முடியவில்லை. கல் என் முகத்தில் அடித்தவுடன் நான் கீழே குனிந்து பார்த்தபோது செங்கல்தான் இருந்தது.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.306/2022 | Date | : 10.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : லட்சுமி | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.07.2025

(எதிரி ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் பேரோடு ஜே ஜே நகரில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது மச்சாண்டார் மகன் அவர் அ.சா.1 பெரியசாமியை எனக்கு தெரியும். அவர் எனது கொழுந்தனார் ஆவார். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 7 மணி அளவில் எனது மகன் பட்டியல் சாட்சி 2 சேகர் என்பவருக்கும், ஆஜர் எதிரிக்கும் எங்கள் வீட்டிற்கு முன்னால் வாய் தகராறு ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த அ.சா.1 பெரியசாமி எதற்காக இருவரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ஆஜர் எதிரி உனக்கு என்ன வந்தது என்று கூறி பெரியசாமியை தகாத வார்த்தைகளால் திட்டி கீழே கடந்த செங்கல்லை எடுத்து பெரியசாமியை அடித்தார். அதில் பெரிய சாமியின் வாயில் செங்கல்பட்டு அவர் முன் வரிசையில் நான்கு பற்கள் கீழே விழுந்துவிட்டது. இதை தடுத்து சென்ற எனது மகன் சேகரையும் எதிரி நெஞ்சில் அடித்துவிட்டார். பின்னர் அடிபட்ட இருவரையும் நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அந்த செங்கலை தற்போது என்னால் அடையாளம்

காட்ட முடியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் செங்கல் அந்த செங்கல் இல்லை. அது மூன்று துண்டுகளாக உடைந்துவிட்டது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.

## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.306/2022 | Date | : 10.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : செல்வம் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.07.2025

(எதிரி ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1. நான் பேரோடு ஜே ஜே நகரில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 10/01/2022-ம் தேதி அன்று நான் குடியிருக்கும் வீட்டிற்கு பக்கத்து வீதியில் சேகர் என்பவருக்கும், சக்திவேல் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் கேள்விப்பட்டேன். பின்னர் மறுநாள் மதியம் 12 மணியளவில் நான் அங்கிருந்த போது சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து மாதிரி வரைபடமும் பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். நானும் மாரியப்பன் என்பவரும் கையெழுத்து செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது.**)

2. பின்னர் சம்பவ இடத்திலிருந்து போலீசார் செங்கல் ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள். அந்த கல்லை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் செங்கல்தான் சம்பவ இடத்திலிருந்து போலீசார்

கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். (**செங்கல் அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் மாரியப்பன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**கைப்பற்றுத்தல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.